# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.22 நாள் 06.01.2026

| CC. No. | 242/2025 (Old CC .No.105/2016) | | |
|---|---|---|---|
| பெயர் | மாணிக்கம் | த/பெ. | ராமன் |
| வயது | 40/26 | தொழில் | மருந்து விற்பனையாளர் |
| கிராமம் | கோயம்புத்தூர் | தாலுக்கா | கோயம்புத்தூர் |

<u>(எதிரிகள் ஆஜர்,).</u>

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை</u> :-

நான் தற்போது கோயம்புத்தூரில் வசித்து, கோயம்புத்தூரில் உள்ள ஆர்.எஸ்புரத்தில் உள்ள விஜய் பார்மா என்ற நிறுவனத்தில் மருந்து விறப்னை பிரதிநிதியாக 2006 முதல் பணி செய்து வருகிறேன். மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் மருந்தக பிரிவிற்கு எங்களது நிறுவனத்திலிருந்து மருந்துகள் 2011 முதல் 2015 வரை சப்ளை செய்துள்ளோம். 01.04.2012 முதல் 31.03.2013 மற்றும் 01.04.2013 முதல் 31.03.2014 வரையிலான காலக்கட்டங்களுக்கு நாங்கள் எங்கள் நிறுவனத்திலிருந்து மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் மருந்தக பிரிவிற்கு மருந்துகள் கொள்முதல் செய்ததற்கான கொள்முதல் கணினி பட்டியல் எங்களுடையதுதான். 18.07.2012 C.N. No. 2067, 06.08.2012 C.N. No. 2764, 06.08.2012 C.N. No.2765, 29.12.2012 C.N. No. 5996, 21.11.2013 C.N. No.6304, 21.11.2023 C.N. No.6310, 24.12.2013 C.N. No. 7521 மேற்படி credit note எண்களில் உள்ள மருந்துகளை தவிர வேறு எதையும் நாங்கள் கொள்முதல் திருப்பம் என மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் மருந்தக பிரிவின் மூலம் எங்களால் பெறப்படவில்லை. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81 ன் கீழான விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.40** ஆகும். என்னிடம்

CJM, MAYILADUTHURAI. R. மாணிக்கம்

காண்பிக்கப்படும் கொள்முதல் கணினி பட்டியல் மற்றும் credit note கணினி பட்டியல் என்னால் வழங்கப்பட்டதுதான். கொள்முதல் கணினி பட்டியல் மற்றும் credit note கணினி பட்டியல் (எண்ணிக்கை 7) முறையே **அ.சா.ஆ.41** மற்றும் **அ.சா.ஆ.42** ஆகும். வணிக குற்றவியல் புலனாய்து துறை போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.)

மறு விசாரணை :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

6/1/26

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.